(2) வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

ஆரம்பாக்கம் மருத்துவமனை.

*394 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், ஆரம்பாக்கம் கிராமத்தில் உள்ள மருத்துவமனை சீராக நடைபெறவில்லை என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆரம்பாக்கத்தில் உள்ள ஆயுர் வேத மருந்தகம் 1971-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை மருத்துவ அதிகாரி வேலைக்கு வராததாலும், பிறகு பயிற்சி பெற்ற ஆயுர்வேத மருத்துவ அதிகாரி கிடைக்காததாலும் சரிவர இயங்கவில்லை. அம்மருந்தகம் 29—5—1973 அன்று திறக்கப்பட்டு, திங்கள் வெள்ளி ஆகிய தினங்களில் கண்ணம்புகுளம் மருந்தகத்தில் உள்ள மருத்துவ அதிகாரியின் உதவியுடன் இயங்கி வந்தது. ஆயுர்வேத பயிற்சி பெற்ற "ஏ" வகுப்பு மருத்துவ அதிகாரி இம்மருந்தகத்தை 8—11—1973-லிருந்து கவனித்து வருகிறார்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த மருத்துவ அதிகாரி வேலைக்கு வராததற்கு என்ன காரணம் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இது ஊராட்சி ஒன்றியத்தால் நடத்தப்படுகிற மருந்தகமாகும். மேற்பார்வை இடுகிற அதிகாரம் மட்டும் அரசுக்கு இருக்கிறது. மருத்துவ அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவர் சில குற்றங்களைப் புரிந்திருந்தார். அவரும் பதிவு செய்துகொள்ளப்பட்ட மருத்துவர்தான். அவர் ஒழுங்காக வேலைக்கு வரவில்லை. அவர் பின்னர் வேலையிலிருந்து விலக்கப்பட்டுவிட்டார்.

திருப்பத்தூர் மருத்துவ மனை.

* 395 வினா—திரு. ஜி. ராமசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், திருப்பத்தூரில் உள்ள அரசு மருத்துவ மனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : (அ) தற்போது அத்தகைய திட்டம் இல்லை.

(இ) வட ஆர்க்காடு மாவட்டம் திருப்பத்தூர் அரசு மருத்துவ மனையில் 48 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்றைக் கூடுதலாகக் கட்டவும், எக்ஸ்-கதிர் பிரிவு ஒன்றை அமைக்கவும், 1972-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் அரசு அனுமதி வழங்கியுள்ளது. எனவே, அங்குள்ள படுக்கை களின் எண்ணிக்கை 72-லிருந்து 120 ஆக அதிகப்படுத்தப்படும். இந்தக் கட்டடம் கட்டி முடிந்தவுடன் படுக்கைகளின் எண்ணிக்கை உயர்த்தப்பட விருக்கிறது.

திரு. ஜி. ராமசாமி : திருப்பத்தூரிலும் அதற்கு அருகாமையிலும் உள்ள கிராமங்களில் மக்கள் தொகை அதிகமாக இருப்பதால், இன்னும் அதிகமாக படுக்கை வசதிகளை ஏற்படுத்தவும், டாக்டர்களின் எண்ணிக்கை யை அதிகப்படுத்தவும் அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மக்கள் தொகை அதிகமாகிக் கொண்டிருந்தால் அதற்கு ஆஸ்பத்திரி கட்டினால் மட்டும் போதாது; அதற்காகத்தான் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கு மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் ஒத்துழைக்க வேண்டும். (சிரிப்பு)).

அடிப்படை மருத்துவ அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம்.

* 396 வினா.—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் " Basic Medical Science Research Institute " என்றொரு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு க. அன்பழகன் :

(அ) ஆம்.

(இ) விவர அறிக்கையொன்று @ சட்டப் பேரவையின் முன் வைக்கப் பட்டுள்ளது.

@ 347–349-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.